GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. [ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

**FA8A** | **6331-24**

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Five-year Regular Course)

Fourth Year – Eighth Semester

INTERPRETATION OF STATUTES

Time : $2\frac{1}{2}$ hours | Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the concept of mens rea construed by Indian Courts in interpreting the Penal Statute.

   தண்டனைச் சட்டங்களை பொருள் விளக்கம் காணும் போது இந்திய நீதிமன்றங்கள் "குற்றம்" என்ற கருத்தமைவை எவ்வாறு கருத்தில் கொள்கிறது என்பதை விளக்கவும்.

2. Explain the criteria to be discussed and considered while using the Mischief Rule in interpretation of a Statute.

   கேடு அகற்றும் விதியை பயன்படுத்தி ஒரு சட்டத்தின் பொருள் விளக்கம் காணும் வேளையில் எவைகளை கருத்தில் கொண்டு விவாதிக்க வேண்டும் என்பதை விளக்கவும்.

3. Enumerate the various external aids that can be used in interpreting a statute.

   செய் சட்டத்திற்கு சட்டப் பொருள் விளக்கம் அளிக்க உதவும் பல்வேறு வெளிப்புற காரணிகளை எடுத்துரைக்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the doctrine of ejusdem generis with reference to cases.

   வழக்குகளை மேற்கோள் காட்டி "இனங் கொண்டு பொருள் கொளல்" என்ற கோட்டிபாட்டினை விளக்குக.

5. Discuss about the Interpretation of Fundamental Rights guaranteed under the Constitution of India.

இந்திய அரசமைப்பால் உறுதியளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளின் சட்டப்பொருள் விளக்கத்தைப் பற்றி விவாதிக்கவும்.

6. What are the general rules of construction available under Sections 5, 9, 10 & 11 of the General Clauses Act, 1897.

பொது வகையங்கள் சட்டம், 1897 - ன் பிரிவுகள் 5, 9, 10 மற்றும் 11 ஆகியவைகளின் கீழ் பொருள் விளக்கத்திற்கான பொது விதிகள் யாவை?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Proviso

வரம்புரை

(b) Legal fiction

சட்டங்கொள் புனைவு

(c) Non obstante clause

எது எப்படி இருந்தாலும் என்னும் வகையம்.

(d) Declaratory statutes

விளம்புகை சட்டங்கள்

(e) Contemporaneous construction

சமகால இணக்கப் பொருள் விளக்கங் கொளல்

(f) Curative legislation

குணப்படுத்தும் சட்டங்கள்

(g) Subsidiary rule

துணை விதி

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Supriya, a woman worker who went on materity leave was paid 26 weeks wages calculated on the basis of 6 days in a week excluding sundays which was challenged by her stating that it should be calculated including sundays. Whether her interpretation will succeed?

பேறு கால விடுப்பில் சென்ற சுப்பிரியா என்ற பெண் தொழிலாளிக்கு ஞாயிற்றுக் கிழமையை தவிர்த்து வாரத்திற்கு ஆறு நாட்கள் என்ன விகிதத்தில் 26 வாரங்களுக்கு சம்பளம் கணக்கிடப்பட்டு கொடுக்கப்பட்டது. அதை அவர் ஞாயிற்றுகிழமைகளும் உள்ளடக்கப்பட்டு வாரத்திற்கு ஏழு நாட்கள் என்ற முறைமையில் சம்பளம் கணக்கிட்டு கொடுக்கப்பட வேண்டும் என்று வழக்கு தொடர்ந்தார். அவரது புனைவு பொருள் கொளல் வெற்றி பெறுமா?

9. 'A' has been detained under Preventive Detention Act, that his presence is an endangerment to law and order. But under the Preventive Detention Act, a person can be detained only when his presence is against public order. 'A' challenges the detention order. The state defends that the law and order and public order are one and the same. Decide.

'அ'—வின் செயல்பாடு சட்டம் ஒழுங்கிற்கு ஆபத்தாக உள்ளதாக தடுப்புக்காவல் சட்டத்தில் சிறை வைக்கப்படுகிறார். தடுப்புக் காவல் சட்டத்தில் ஒருவரை சிறை வைக்க வேண்டுமெனில் அவரது செயல்பாடு பொது அமைதிக்கு ஆபத்தாக இருக்க வேண்டும் என்று கூறுகிறது. 'அ' அவ்வுத்தரவினை எதிர்க்கிறார். அரசு, சட்டம் ஒழுங்கும் மற்றும் பொது அமைதியும் ஒன்றே என எதிர்வாதம் செய்கின்றது. தீர்மானிக்கவும்.

10. The question before the apex court is whether "food colours" were "dyes" and "colours" and "syrup essences" were scents and perfumes within the meaning of notification issued under Section 3A of Uttar Pradesh Sales Tax Act, 1948. Petitioner challenged the interpretation of words in the statute. Decide.

உத்திரப்பிரதேசம் விற்பனை வரிச்சட்டம் 1948ன் பிரிவு 3A இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின் பொருளில் "உணவு வண்ணங்கள்" என்பது "சாயங்கள் மற்றும் வண்ணாங்கள்" மற்றும் "சிரப் எசன்ஸ்கள்" என்பது வாசனை மற்றும் வாசனை திரவியங்களா என்று உச்ச நீதிமன்றத்தின் முன் கேள்வி ஒன்று எழுந்துள்ளது. மனுதாரர் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட வார்த்தைகளின் பொருள் விளக்கத்தை வாதிடுகிறார். முடிவு செய்க.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**FA8B** 6332–24

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Five – year Regular Course)

Fourth Year – Eighth Semester

LAND LAWS

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the characteristic features of Zamindari system and bring out the various reasons for the abolition of Zamindari system in Tamil Nadu.

   ஜமீன்தாரி முறையின் குணாதிசயங்களை விளக்கி தமிழ்நாட்டில் ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டதற்கான பல்வேறு காரணங்களை விளக்குக.

2. Write in detail an essay on the Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955.

   1955ம் ஆண்டின் பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்தை பற்றி விவரமாக விளக்குக.

3. What is Standard Acre? What is the Ceiling limit of an individual, family and other institutions?

   தரநிலை ஏக்கர் என்றால் என்ன? ஒரு தனிநபர், குடும்பம் மற்றும் மற்ற நிறுவனங்களின் நில உச்சவரம்பு அளவு எவ்வளவு?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What are the obligations of Land Lord and Tenant under the Tamil Nadu Regulation of Rights and Responsibilities of Land Lord and Tenants Act, 2017?

   தமிழ்நாடு நில உரிமையாளர் மற்றும் குத்தகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் சட்டம் 2017ன் கீழ், நில உரிமையாளர் மற்றும் குத்தகைதாரரின் கடமைகள் என்ன?

5. Explain the salient features of the Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent Relief Act, 1972.

1972ம் ஆண்டு தமிழ்நாடு குத்தகை சாகுபடியாளர்கள் வாடகை பாக்கி நிவாரணச் சட்டத்தின் சிறப்பியல்புகளை விளக்குக.

6. Describe the salient features of the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Act, 1971.

1971ம் ஆண்டின் தமிழ்நாடு குடியிருப்பு உறைவிடம் கொண்டோர் (உடைமையுரிமை வழங்கு) சட்டத்தின் சிறப்பியல்புகளை விவரி.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Land Board.

நில வாரியம்.

(b) Sub-Letting.

கீழ்க் குத்தகை.

(c) Revision.

சீராய்வு.

(d) Cultivating Tenant.

பயிரிடும் குத்தகைதாரர்.

(e) Define Rent Court and Rent Tribunals under the Tamil Nadu Regulation of Rights and Responsibilities of Land Lord and Tenants Act, 2017.

வாடகை நீதிமன்றம் மற்றும் வாடகை தீர்ப்பாயம் என்பது தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டம் 2017-ன் கீழ் வரையறு.

(f) Kaiaeruvaramdar, Mattuvaramdar

கையேறுவாரம்தாரர்கள், மாட்டுவாரம்தாரர்கள்.

(g) Record Officer.

பதிவுறு அலுவலர்.

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Kannamma a Landlord took a building for repair from her tenant Meena. Even after 9 months period she did not hand over the building to the tenant. What is the remedy available to the tenant?

கட்டிட உரிமையாளர் கண்ணம்மா கட்டிடத்தை செப்பனிட வாடகைதாரர் மீனாவிடமிருந்து பெறுகிறார். 9 மாத காலம் கடந்த பின்னரும் கண்ணம்மா கட்டிடத்தை மீனாவிற்கு ஒப்படைக்கவில்லை. மீனாவிற்கு உள்ள பரிகாரம் என்ன?

9. The Cultivating Tenant Prem Kumar converted his agricultural land into Kennel and breeds dogs and keeps ferocious dogs. The Landlord Vinoth Kumar filed a petition for eviction of Prem Kumar. Decide.

பிரேம்குமார் என்கிற விவசாய குத்தகைதாரர் அவருடைய விவசாய நிலத்தை தனது நாய்களின் வசிப்பிடமாகவும் மற்றும் நாய்கள் உற்பத்தி செய்யுமிடமாகவும் மாற்றினார் மற்றும் கொடூரமான நாய்களையும் வைத்திருந்தார். வினோத் குமார் நிலத்தின் உரிமையாளர், குத்தகைதாரரை வெளியேற்ற மனுதாக்கல் செய்கிறார். தீர்மானிக்கவும்.

10. A Revenue Divisional Officer passed preliminary orders that, in the next adjournment date itself the cultivating tenant must pay all his arrears of rent with costs. But for the next hearing the tenant was absent. The RDO decides the case ex parte and ordered eviction. What is the remedy available to the tenant?

வருவாய் கோட்ட அலுவலர் ஒத்திவைக்கப்பட்ட மறுதேதியிலேயே பயிரிடும் குத்தகைதாரர் முழு குத்தகைப் பாக்கியையும் செலவுத் தொகையுடன் செலுத்த வேண்டுமென்று முதல்நிலை உத்தரவைப் பிறப்பித்தார். ஆனால் அம்மறு தேதியில் குத்தகைதாரர் வருவாய் நீதிமன்றத்திற்கு ஆஜராகவில்லை. வருவாய் கோட்ட அலுவலர் ஒருதலைப்பட்சமான தீர்ப்பை அளித்து குத்தகைதாரரை வெளியேற்றுவதற்கான உத்தரவைப் பிறப்பித்தார். குத்தகைதாரருக்கு ஏதேனும் பரிகாரம் உண்டா?

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

FA8C

6333–24

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Five-year Regular Course)

Fourth Year – Eighth Semester

INTERNATIONAL LAW

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss the various theories which explains the relationship between international law and municipal law.

   சர்வதேச சட்டத்திற்கும் நாட்டுச்சட்டத்திற்கும் இடையேயுள்ள உறவுநிலையை விவரிக்கக்கூடிய பல்வேறு கொள்கைகளை விவாதிக்கவும்.

2. "United Nations Convention on Law of Sea represents a kind of International Public Order of the oceans". Explain.

   "ஐக்கிய நாடுகளின் கடலாண்மை சட்டமானது பெருங்கடல்களின் சர்வதேச பொது ஒழுங்கை பிரதிபலிக்கின்றனது" - விளக்குக.

3. Explain the Constitution, Powers and Functions of the Security Council of United Nations.

   ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு அவையின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் பணிகள் குறித்து விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define 'treaty'. Under what circumstances it might be terminated?

   'உடன்படிக்கை' வரையறு. எந்தச் சூழ்நிலைகளில் உடன்படிக்கைகள் முடிவுக்கு வரலாம்?

5. Define 'Recognition'. Explain the various theories regarding recognition.

'அங்கீகாரம்' வரையறு. அங்கீகாரம் குறித்து பல்வேறு கொள்கைகளை விளக்கவும்.

6. Explain the privileges and immunities of he diplomatic envoys.

இராஜதந்திர தூதுவர்களின் சிறப்புரிமைகள் மற்றும் விலக்குறிமைகள் குறித்து விளக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Art. 2 of U.N. Charter

ஐ.நா. சாசனத்தின் ஷரத்து 2

(b) Double-Veto

இரட்டை நீக்கதிகாரம்

(c) State Succession

நாடுகளின் இறங்குரிமை

(d) Arantzazu Mendi's Case

அரன்ட்சாசு மெண்டி வழக்கு

(e) Five freedoms of Air

காற்று வெளிமண்டலத்தின் ஐந்து உரிமைகள்

(f) Jus Cogens

ஜஸ் கோஜென்ஸ்

(g) Extradition

மீட்டொப்படைத்தல்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. State 'X' was bifurcated into states 'A' and 'B'. State 'A' has a bigger land mass and was originally the member of the UNO. State 'B' claims that only state 'B' is the original member of the UNO and approaches ICJ. Decide.

'X' என்ற நாடு இரண்டாக பிரிந்து 'A' மற்றும் 'B' என்ற இரண்டு நாடுகளாயின. தற்பொழுது 'A' நாடு பெரிய நிலப்பரப்பினைக் கொண்டு ஐ.நா. சபையின் அசல் உறுப்பினர் நாடாக திகழ்கிறது. ஆனால் 'B' நாடு தாங்கள் தான் ஐ.நா. சபையின் அசல் உறுப்பினர் என்று கூறி சர்வதேச நீதிமன்றத்தை நாடுகிறது. தீர்மானிக்கவும்.

9. State 'X' fishermen were fishing in the EEZ of State 'X' while the opposing state 'S' which did not have any right over it, attacked the fishermen and arrested fishermen. Decide the State X's right over its EEZ against the state 'S'.

'X' நாட்டின் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் அந்நாட்டின் மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டியிருக்கும்போது, அதற்கு எதிராக உள்ள எதிர்பக்க நாடான 'S'-க்கு அதில் எந்தவித உரிமையும் இல்லாத நாடு, மீனவர்களைத் தாக்கியும் மற்றும் கைதும் செய்துவிடுகின்றனர். 'S' நாட்டிற்கு எதிராக 'X' நாட்டிற்கு சிறப்பு பொருளாதார மண்டலத்திலுள்ள உரிமைகளை தீர்மானிக்கவும்.

10. Ms. 'X' belongs to American National, married to Mr. 'Y' who is an Indian National. Mrs. 'X' has obtained Indian Nationality by marriage. Now Mrs. 'X' and Mr. 'Y' have misunderstood between them and they were mutually separated by competent court in India. Decide the nationality of Mrs. 'X'.

இந்திய நாட்டைச் சேர்ந்த திரு 'Y' என்பவரை அமெரிக்கா நாட்டைச் சேர்ந்த செல்வி 'X' என்பவர் திருமணம் செய்துள்ளார். அதனால் திருமணத்தின் மூலம் திருமதி 'X' தற்பொழுது இந்திய நாட்டுரிமையை பெற்றுள்ளார். கருத்து வேறுபாடு காரணமாக திருமதி 'X'-ம் 'Y'-ம் தகுதிவாய்ந்த இந்திய நீதிமன்றத்தின் மூலம் இசைவு விவாகரத்தின் மூலம் இருவரும் பிரிந்து விட்டனர். தற்பொழுது திருமதி 'X'-ன் நாட்டுரிமையை தீர்மானிக்கவும்.

---